★ எவர்சில்வர்
★ விளையாட்டுப் பொருள்கள்
★ பிளாஸ்டிக் பொருள்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
177, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

வியாபாரிகளே
உங்களுக்குத்தேவையான
★ அழகு சாதன பொருள்கள்
★ தையல் பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
177, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 19 சனிக்கிழமை (05 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 345

### ஆயுதங்களைக் கைவிடும் வரை

# புலிகளுடன் பேச்சு நடத்த மாட்டோம்!

## ஐ.தே.க. வேட்பாளர் சிறிமா அறிவிப்பு

கொழும்பு, நவம்பர் 5

தாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டினால், விடுதலைப் புலிகள் தமது பயங்கரவாத நடவடிக்கைகளையும், தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டத்தையும் கைவிடும் வரை அவர்களுடன் சமாதானப் பேச்சு எதிலும் ஈடுபடப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான சிறிமா திஸாநாயக்கா அறிவித்துள்ளார்.

தமது கணவர் காமினி திஸாநாயக்காவை படுகொலை செய்தது புலிகளே என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர், அவர் நேற்று நடத்திய முதலாவது செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

புலிகளுடன் அரசு நடத்தும் பேச்சுக்களைக் கடுமையாக விமர்சித்து கருத்து வெளியிட்ட சிறிமா திஸாநாயக்கா, பிரச்சினைக்குத் தீர்வுகாணும் உத்தேசத் திட்டம் எதுவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இளாலி - பூநகரி படகுச்சேவை

யாழ்ப்பாணம், நவ. 5

இளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

### சந்திரிகா தமிழிலும் உரை

தொலைக்காட்சியில் தமது தேர்தல் பிரசார உரையை நேற்று ஆங்கிலத்தில் நிகழ்த்திய பிரதமர் சந்திரிகா, உரையின் இறுதியில் எழுதி வைத்திருந்த தமது குறிப்பைப் பார்த்தபடி சுமார் இரண்டு நிமிட நேரம் தமிழிலும் உரையாற்றினார்.

### வடக்கு நோக்கி தாழமுக்கம்?

வங்காள விரிகுடாவின் தென்மேற்குப் பகுதியில் திருமலைக்கு வடகிழக்கே 350 கிலோ மீற்றர் தொலைவில் தாழமுக்கம் ஒன்று உருவாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த தாழமுக்கம் மேலும் தீவிரமடைந்து மேற்கு, வடமேற்குத் திசைக்கு நகரக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இதனால் வடக்கு, வடகிழக்கு கடலில் மோசமான காலநிலை நிலவும் என்றும் — பலத்த காற்றுடன் அடிக்கடி மழை பெய்யும் என்றும் வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

### அவதானிகள் குழு வரும்

எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக நான்கு நாடுகளைச் சேர்ந்த அவதானிகள் குழு ஒன்று அடுத்த சில தினங்களில் கொழும்பு வந்து சேரும் என்று தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (உ-எ-6)

### பென்சன் வவுச்சர்கள் வந்தன

வடமராட்சி, நவ. 5

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் இம் மாதத்துக்கான பென்சன் வவுச்சர்கள் 'கோமாரி' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன. யாழ். செயலக அதிகாரி ஒருவர் அவற்றை இங்கு எடுத்து வந்துள்ளார்.

### மக்கள் ஆணை பெற்றுள்ளோம்

# ஒளிவு மறைவின்றி புலிகளுடன் பேச்சு

## பொ.ஐ.மு.வேட்பாளர் சந்திரிகா தகவல்

கொழும்பு, நவம்பர் 5

நாம் மக்களிடம் ஆணை பெற்றுள்ளோம்; படையினருடன் கலந்தாலோசித்துள்ளோம். அதன் பின்னரே நாம் வடபகுதிக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் ஒளிவு மறைவின்றி பேச்சுக்களை ஆரம்பித்தோம். — இவ்வாறு பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான சந்திரிகா குமாரதுங்கா அறிவித்தார்.

நேற்று தொலைக்காட்சியில் நடத்திய தேர்தல் பிரசார உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்த உரையில் அவர் மேலும் கூறியதாவது:-

முந்தைய அரசு வடபகுதி மீது விதித்திருந்த பொருளாதாரத்தடை எம்மால் தளர்த்தப்பட்டது. இத்தடையினால் சாதாரண மக்கள்தான் கஷ்டப்பட்டனர். விடுதலைப் புலிகள் தங்களுக்குத் தேவையானவற்றை எப்படியோ பெற்றுக்கொண்டு வந்தனர்.

எமது நல்லெண்ண நடவடிக்கைக்கு பதிலாக விடு

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிறிமா போட்டியிடுவதை ஆட்சேபித்து வழக்கு!

## மற்றொரு வேட்பாளர் ரணசிங்க தாக்கல்

கொழும்பு, நவ. 5

ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. சார்பில் திருமதி சிறிமா திஸாநாயக்கா போட்டியிடுவது சட்டவிரோதமானது என உத்தரவிடக் கோரியும்—

ஐ. தே. க. வேட்பாளர் என்ற வகையில் திருமதி சிறிமா திஸாநாயக்காவுக்காக நடத்தப்படும் பிரசார நடவடிக்கைகளை நிறுத்தும்படி பணிப்புரை விடுக்கும்படி கோரியும்—

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுப் பிற்பகல் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

இத்தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஏ. ஜே. ரணசிங்க இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார்.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்க மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்கள், தேர்தல் ஆணையாளர், ஐ. தே. கவின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறளை,

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சிறிமா திஸாநாயக்கா அறிவிப்பு

## ஐ.ஐ. தே. மு. கட்சியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டேன்

கொழும்பு, நவ. 5

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்தும், அக்கட்சியின் சார்பில் மத்திய மாகாணசபையில் வகித்து வந்த அங்கத்தவர் பதவியிலிருந்தும் தான் இராஜினாமாச் செய்துவிட்டதாக திருமதி சிறிமா திஸாநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

அவர் ஐ. தே. க. உறுப்பினரல்லர் என்று கூறப்படுவது குறித்து அவரிடம் கேட்கப் பட்டபோதே —

தாம் ஐ. தே. க. உறுப்பினர் என்றும் ஐ. ஐ. தே. முன்னணியிலிருந்து இராஜினாமாச் செய்து விட்டதாகவும் அவர் சொன்னார். (உ-6)

# சமாதான முயற்சிகளுக்கு இராணுவம் முழு ஆதரவு!

## பாதுகாப்புத்துறை அதிகாரி தகவல்

மணிலா, நவ. 5

ஜனாதிபதி தேர்தலில் பிரதமர் சந்திரிகா வெற்றிபெற்ற பின்னர் அவர் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த மேற்கொள்ளும் முயற்சியை இராணுவம் ஆதரிக்கும்.

தமது பெயரை வெளியிட விரும்பாத இராணுவ உயர் அதிகாரி ஒருவர் முன்கண்டவாறு தெரிவித்ததாக ''ரோய்ட்டர்'' செய்தி தெரிவித்தது.

பேச்சுக்கள் நடக்கும் காலத்தில் இராணுவம் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும் என்றும்—

பேச்சுவார்த்தையை இராணுவம் குலைக்கப் பார்க்கிறது என்று பிரதமர் சந்திரிகா முன்பு கூறியிருந்தது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான சில இராணுவ அதிகாரிகளை மனதில் வைத்தே என்றும்—

ஜனாதிபதியாக சந்திரிகா பதவி மாறியதும் இவ்வா

(4ஆம் பக்கம் பார்க்க)

### குரும்பசிட்டி பகுதியில் கடந்த வாரம்

## படையினரிடம் சிக்கியவர் நேற்று விடுதலையானார்

வடமராட்சி, நவ. 5

கடந்த ஒரு வார காலத்துக்கு முன்னர் குரும்பசிட்டிப் பகுதியில் படையினரிடம் பிடிபட்ட இளைஞர் ஒருவர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

புன்னாலைக் கட்டுவன் வடக்கு, கள்ளிக்காட்டைச் சேர்ந்த குட்டித்தம்பி ராஜ்குமார் (வயது 31) என்பவரே விடுதலை செய்யப்பட்டார்.

குரும்பசிட்டிப் பகுதியில் அம்மன் கோயில் ஒன்றை வழிபடச் சென்ற சமயம் இவர் படையினரிடம் பிடிபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரால் விடுவிக்கப்பட்ட பிரஸ்தாப இளைஞர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் கோமாரி கப்பல் மூலம் பருத்தித்துறைக்குக் கூட்டி வரப்பட்டார். (ஐ-173)

### முன்னைய செயலர்களை போன்று

## நானும் கொல்லப்படலாம் ஆனால் கட்சி இயங்கும்

### ஐ. தே. க. புதிய செயலர் தகவல்

கொழும்பு, நவ 5

நெருக்கடியான சமயத்தில் நான் ஐ. தே. க. பொதுச் செயலாளர் பதவியை ஏற்றுள்ளேன். நான் கொல்லப்படலாம்; ஆனால் கட்சி தொடர்ந்து இயங்கும். ஐ.தே.க. பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறளை முன் கண்டவாறு தெரிவித்தார்.

''உங்களுக்கு முன் ஐ.தே.க. பொதுச் செயலாளர்களாக இருந்த ஹர்ஷா அபயவர்த்தனா, நந்தலால் பெர்னாண்டோ, ரஞ்சன் விஜேரத்னா மற்றும் காமினி விஜேசேகரா ஆகியோர் அடுத்தடுத்து கொல்லப்பட்டு விட்டார்களே. இந்த நிலையில் நீங்கள் இப்பொறுப்பை ஏற்றுள்ளது குறித்து என்ன கருதுகின்றீர்கள்?'' என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் முன் கண்டவாறு தெரிவித்தார். (உ-எ)

# சமாதானமாக வாழும் நிலையை ஏற்படுத்த அரசுக்கு ஒத்துழைப்பு

## ரணில் உறுதி மொழி

கொழும்பு, நவ. 5

மக்கள் சமாதானமாக வாழக் கூடிய இடமாக இலங்கையை மாற்றுவதற்கு தற்போதைய அரசுக்கு தமது கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா உறுதியளித்தார்.

கொழும்பு ஆங்கில தினசரி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஐ. தே. க. ஒத்துழைப்பு வழங்குமா என்ற கேள்விக்கு—

''சில திருத்தங்களுடன் நிறைவேற்று ஜனாதிபதி முறையை தொடர்ந்து வைத்திருப்பது ஐ. தே. கவின் கொள்கையாகும் என்று அவர் பதிலளித்தார்.

நாடாளுமன்றத்துக் குரிய அதிகாரங்கள் பலப்படுத்தப் படும். இதே வேளை — அரசமைப்பு சீர்திருத்தம்தொடர்பாக அது பற்றி ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்படும் யோசனைகளையும் ஐ. தே. க பரிசீலிக்கும் — என்றார் அவர்.

### தனது குடும்பத்தவர்களில்

## மனைவி உட்பட 8 பேரை சுட்டுக் கொன்ற சிப்பாய்

### குருநாகலில் நேற்று சம்பவம்

மணிலா, நவ. 5

தனது மனைவியின் நடத்தை மீது சந்தேகம் கொண்ட சிங்கள இராணுவச் சிப்பாய் ஒருவர் தனது மனைவியையும் குடும்பத்தவர்களில் வேறு ஏழு பேரையும் சுட்டுக் கொன்றார்.

குருநாகல் மாவட்டம் மாவத்தகம பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

கொல்லப்பட்டவர்களில் அவரது தாய், தந்தை, சகோதரி, மாமனார், மைத்துனி ஆகியோரும் அடங்குவர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் கர்ப்பிணிப் பெண். சிப்பாயின் மாமியார் காயமுற்றார்.

பிரஸ்தாப அதிரடிப்படைச் சிப்பாய் தனது உற

(4ஆம் பக்கம் பார்க்க)

# அரச தாதியர்கள் வேலை நிறுத்த மிரட்டல்!

கொழும்பு, நவ. 5

உறுதியளிக்கப்பட்டபடி ஆயிரம் ரூபா அலவன்ஸை அடுத்த 48மணித்தியாலங்களுக்குள் வழங்காவிடில் தொழிற்சங்கநடவடிக்கையில் இறங்கப் போவதாக அரச ஐக்கியதாதிச் சேவைச் சங்கம் அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சருக்கு கடிதமூலம் தங்கள் நிலைப்பாட்டை சங்கம் தெரிவித்துள்ளதாக கொழும்புச்செய்திகள் தெரிவித்தன.

# பேச்சு மூலமே தீர்வு; யுத்தத்தினால் அல்ல!

## ஜே.வி.பி. வேட்பாளர் கலப்பதி அறிவிப்பு

வடக்கு - கிழக்கு இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்; யுத்தத்தின் மூலம் அல்ல.

இவ்வாறு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகி[illegible] ஜே. வி. பி. வேட்பாளர் நிஹால் கலப்பதி தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு உடன்பாடு காணப்படும் போது, சமாதானம் வேண்டாம் என்று கூறும் கட்சிகளின் கருத்துக்களும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் [illegible] யுத்தத்தில் சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களை புரிந்து கொள்வதின் மூலம் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியும். தேசிய இனங்களின் கருத்துக்களை மட்டும் அறிந்து கொள்வதன் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

# மணலாறு தாக்குதலில் இரு சிப்பாய்கள் பலி!

கொழும்பு, நவ 5

மணலாறுப் பகுதியில் ஜயசிங்கபுர என்னுமிடத்தில் இராணுவக் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய்கள் இருவர் கொல்லப்பட்டனர்; மற்றொருவர் காயமடைந்தார்.

கொழும்பில் உத்தியோக பூர்வ இராணுவ வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. (உ-ஐ-4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### மலிவு விற்பனை

3ஆம் தவணைப் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்காக ஆண்டு 3இல் இருந்து O/L வரை அனைத்து பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) 50 வீதம் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond புத்தக நிறுவனம் 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7988)

### பாலர் ஆசிரியர் பயிற்சி

விரைவில் பதிக க.பொ.த. (சா/த) கடைசித் தகைமை, சனி, ஞாயிறு வகுப்புக்கு வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7995)

### தேவை

வயோதிபத் தம்பதிகளுக்கு சமைக்கவும், வீட்டைப் பராமரிக்கவும், வீட்டோடு இருக்கத் தகுந்த பெண் உதவியாள் உடன் வரவும். சம்பளம் பேசிக் கொள்ளலாம். இல. 25, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். [33558]

### வியாழ மாற்றம்

வியாழமாற்றம் ரூ. 10/- (எல்லா ராசிப் பலன்களும்) விற்பனையாகின்றது. பாடசாலை அப்பியாசக் கொப்பிகள், அலுவலக உபகரணங்கள், இலங்கை - இந்திய சஞ்சிகைகளுக்கு: ஆனந்த்ஸ் புத்தகசாலை, இல. 21/B. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33646)

### றோணியோ பிரதிசெய்தல்

100 பேப்பர் இரண்டு பக்கம் தெளிவாக பிரதி செய்வதற்கு 30/- ரூபா மட்டுமே அறவிடப்படுகிறது. ரைப்பிங் 8/- குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (சி-9607)

---

## பிற்போடப்பட்டுள்ளது

யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி
அபிவிருத்தி நிதிக்காக
இன்று (05-11-1994) சனிக்கிழமை
நடைபெறவிருந்த
பருத்திநகர் சான்டோ அமரர் எம். துரைரத்தினத்தின்
மாணவன்

**சான்டோ செல்வராசா**
**குழுவினரின்**
**வீரதீர சாகச**
**விளையாட்டுக்கள்**

தவிர்க்க முடியாத காரணத்தால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.
அசௌகரியத்திற்கு மனம் வருந்துகின்றோம்.

– கல்லூரி அபிவிருத்திக்குழு.

[33644]

---

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 95 DAY CLASSES

**A/L 94** பரீட்சை எடுத்த மாணவர்களுக்குரியது)

பொருளியல் — வரதராஜன் 11-00 — 12-30
கணக்கியல் — சௌந்தி 8-00 — 9-30
வர்த்தகம் — பசில் 9-30 — 11-00
இந்துநாகரிகம் — காரை. கெங்கா 12-30 — 2-00

**ஆரம்பம்: 07 - 11 - 1994**
திங்கள் 8-00 a.m.

**சனி, ஞாயிறு**

அளவையியல் — திரு S.S.மனோகரன் 7.00 — 8.00
தமிழ் — திருமதி. மீரா 8.00 — 9.00
இந்து நாகரிகம் — திரு. பாலா 10.00 — 11.00

[சி-9602]

---

உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம் ஐப்பசித் திங்கள் 19ஆம் நாள் (05 – 11 – 1994) சனிக்கிழமை பகல் 11-20 மணி முதல் 13-05 மணி வரையிலுள்ள மகர லக்கினமும் அனுஷ நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில்,

திரு. திருமதி நவரட்ணம்
தம்பதிகளின்
ஏகபுத்திரன்
திருநிறை செல்வன்
**முகுந்தன்**
அவர்களுக்கும்

திரு. திருமதி குகதாசன்
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**தபோதினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணத்தை இன்று (05-11-1994) வவுனியா நகரசபை மண்டபத்தில் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய்ச் சுற்றம் சூழ வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி வி. நவரட்ணம்,
பலாலி, வசாவிளான்
(167, ஸ்ரேசன் றோட்,
வவுனியா.)

திரு. திருமதி குகதாசன்,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.
(27, குட்செட் றோட்,
வவுனியா)

(இருவீட்டார் அழைப்பு)

[33649]

---

தமிழகம் தஞ்சாவூரில் நடைபெறும்
எட்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில்

## ஈழத்துத் தமிழ் நூல்கள் கண்காட்சி

காந்தளகம் நிறுவனத்தினர் இதை ஏற்பாடு செய்துள்ளனர். உங்கள் - நூல் வெளியீடுகள் ஒவ்வொன்றிலும் 5 படிவங்கள் 25-11-94இற்கு முன்னர் பின்வரும் முகவரியில் கொடுத்து உரிய கழிவுக்குப் பின்னுள்ள விலையைப் பெற்றுக் கொள்க.

திரு. க. ஜீவகதாஸ்,
அறவழிப் போராட்டக் குழு,
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

விளம்பரம் வெளியிட்டவர்: திரு. க. சச்சிதானந்தன்
காந்தளகம் 834, அண்ணா சாலை,
சென்னை 600 002.

(33652)

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்க
சாவகச்சேரிப் பிரிவு
நடத்தும்

## தொண்டர் விழாவும், சான்றிதழ் பரிசளிப்பும்

இடம்: இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரிப் பிரிவுப் பணிமனை

காலம்: 19 — 11 — 1994 சனிக்கிழமை

அன்றைய தினம் நடைபெறவிருக்கும் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் **14 — 11 — 94** திங்கட்கிழமை பி. ப. **4-00** மணிக்கு முன்னர் எமது பிரிவுப் பணிமனையில் நேரிலோ, கடித மூலமோ அனுப்பப்படல் வேண்டும்.

**போட்டிகள் சம்பந்தமான விவரங்கள்:**

1. கவிதைப் போட்டி
   (கண்பார்வை இழந்தோர்களுக்கு)
2. முச்சக்கர சைக்கிள் வண்டி போட்டி
   (அங்கவீனர்கள் ஆண்கள்/பெண்கள்)
3. சைக்கிள் ஓட்டப் போட்டி
   ஆண்கள் — 15 மைல்
   பெண்கள் — 5 மைல்
   (இலங்கை செஞ்சிலுவைச்சங்க தொண்டர்களுக்கு மாத்திரம், சாவகச்சேரிப் பிரிவுத் தொண்டர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள். ஏனைய பிரிவின் தொண்டர்கள் தமது பிரிவின் சிபாரிசுடன் விண்ணப்பிக்க வேண்டும்)
4. மரதன் ஓட்டம்
   இடம் பெயர்ந்தோர்க்கானது)
   ஆண்கள் — 10 மைல்
   பெண்கள் — 3 மைல்
   (மரதன் ஓட்டத்திற்கு விண்ணப்பிக்கும் இடம் பெயர்ந்தோர் அவ்வப்பகுதி கிராம உத்தியோகத்தரால் இடம் பெயர்ந்தோர் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.)

கௌரவ செயலாளர்,
இ. செ. சி. ச,
சாவகச்சேரிப் பிரிவு.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க
சாவகச்சேரி, பிரிவுப் பணிமனை,
மில் வீதி,
மீசாலை கிழக்கு, சாவகச்சேரி.
04-11-1994

[சி-9303]

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**

ஒப்பந்த அடிப்படையில் முழு நேர உப விடுதித் தலைவர் பதவிக்கான (ஆணும், பெண்ணும்), விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1994-11-30 வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

*சம்பள அளவுத்திட்டம்:*

ரூபா 5,400/- (நிலையானது)
மாதமொன்றுக்கு

*தகைமைகள்:*

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரி.
விடுதிகளை நிருவகிப்பதிலும், முகாமை செய்வதிலும் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

*வயது:*

40ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

*குறிப்பு:*

தெரிவு தேர்வு மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும் நடைபெறும்.
வெற்றி பெறும் விண்ணப்பதாரி நியமனம் பெறும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாலசிங்கம் விடுதி/ஆனந்த குமாரசாமி விடுதி/பெரிய கடை விடுதி/மலாயாச் சங்க விடுதி/இராமநாதன் நுண்கலைக் கல்விக் கழக விடுதி அல்லது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாய பீடவிடுதி ஆகியவற்றிலொன்றில் வசித்தல் வேண்டும். ஆனால், வதிவுமண்டபத்தில் குடும்பத்துடன் வசிக்க முடியாது.
வெற்றி பெறும் அபேட்சகர் மீளளிக்கப்படும் பிணைவைப்பாக, 5,000/-ரூபா வைச் செலுத்துதல் வேண்டும்.

இத்தொகை அவரின் சம்பளத்திலிருந்து பத்து மாதாந்தத் தவணைப் பணங்களில் அறவிடப்படும்.

சம்பளத்திற்கு மேலதிகமாக சம்பளத்தின் 25 சதவீதம் நிலுவையிலுள்ள பணி நிறைவேற்றுப்படியாக 1994 டிசம்பர் 31 ஆம் திகதி வரை செலுத்தப்படும்.

1993 மே 12 ஆம் திகதிய 9/93 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப 600/- ரூபா மாதாந்தப் படி செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கியின் நவீன சந்தை கிளையிலோ சிறாப்பரின் முகப்பு மேசையிலோ 20/- ரூபாவைச் செலுத்தி இப்பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- பெறுமதியுடைய காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் 23x10 ச.மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும் **விதிக்கப்பெற்ற** படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளில் உள்ளோர் தமது விண்ணப்பங்களை நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவில்லாதவாறு விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

—பதிவாளர்,

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
1994-10-27.

(சி-9587)

---

## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்
# சகல அரச ஊழியருக்கும் சம்பளத்தில் முற்பணம்

கொழும்பு, நவ. 5
சகல அரச ஊழியர்களுக்கும் இம்மாதச் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக வழங்கவேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படும் அரச ஊழியர்களுக்கே இச் சம்பள முற்பணம் வழங்கப்பட வேண்டும் என்று அரசு முன்னர் பணித்திருந்தது.

ஆனால் தற்போது சகல அரச ஊழியருக்கும் இச் சம்பள முற்பணம் வழங்குவது என முடிவு செய்யப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

---

## VACANCIES

**QUALIFIED PHARMACIST AND MEDICAL LABORATORY TECHNOLOGIST**

**Green Memorial Hospital, Manipay.**

Applications are invited from Qualified and Experienced Pharmacists and Medical Laboratory Technologist for our Institution.

SALARY: Negotiable

APPLY TO: Medical Superintendent,
Green Memorial Hospital, Manipay,
on or before 25 - 11 - 1994

[C-9606]

---

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வணிக முதற் தேர்வு
(Ist in Com.)

1 — 2 ஆங்கிலம் திரு. ஜெயக்குமார்
2 — 3 பொருளியல் திரு. வரதராஜன்
3 — 4 வணிகமும் முகாமைத்துவமும் திரு. பசில்
4 — 5 கணிதம் திரு. குணம்
5 — 6 கணக்கியல் திரு. இந்திரமோகன்

**ஆரம்பம்: 05 - 11 - 1994 சனி**

[சி-9505]

---

## கண்ணீர் அஞ்சலி

மயிலணி சுன்னாகத்தைச் சேர்ந்த
அமரர்
**சிவகடாட்ச நாகேஸ்வரக் குருக்கள்**
அவர்களின்

திடீர் மறைவையொட்டி அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் தந்தையாருக்கும், சகோதரர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவபூதராய பக்தர்கள்,
வரிகாட்டி, சுன்னாகம் கிழக்கு.

(7693)

---

## ஒன்பதாம் ஆண்டின் உள்ளத்து ஓசைகள்

தோற்றம்: 02 — 06 — 1934



மறைவு: 05 — 11 — 1985

**அமரர் தம்பு மாசிலாமணி**
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

என்றும் —
எங்கள் இதயக் கோயிலில் ஒளிவீசும் தெய்வமே!
அன்று —
ஆசிரியப் பணியில் ஆசை கொண்டிருந்தும்,
காவற்துறையின் கடமையை ஏற்றீர்கள் – ஆயினும்
நீங்கள் —
மாண்புற அமைத்திட்ட "மாசிலாலயம்"
கல்வித் தாகம் கொண்டு தவித்தது.
இன்று —
கல்விப் பணியில் மூவரைக் கொண்டு,
கவினுறத் திகழும் காட்சியைக் கண்டு,
நீங்கள் —
வானப்பரப்பில் அருவமாய் நின்று,
வாழ்த்தி, ஆசிகள் வழங்குவீர்கள் என்று,
நாங்கள் —
நித்தமும் நினைத்து நெஞ்சக் கோயிலில்
நினைவுப் பூக்களால் அஞ்சலிக்கின்றோம்!

- குடும்பத்தினர்.

"மாசிலாலயம்"
கோவியம்பாதி,
கொற்றாவத்தை.

[33645]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## சரணாகதிக்கு அவசரமா?

பாதுகாப்புப் படையினரின் இரண்டு மாத - நவம்பர், டிசம்பர் மாத - செலவுகளுக்கென, மேலதிகமாக 538 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டிலிருந்து, கடந்த பதினொரு வருடங்களில் ஸ்ரீலங்கா அரசின் இராணுவச் செலவு மிக வேகமாக உயர்ந்து, நாட்டின் மொத்தச் செலவினங்களில் இருபது சத வீதத்தை உறிஞ்சும் அளவுக்கு வந்துள்ளமை உலகம் அறிந்ததே. யுத்தம் தொடங்கிய இந்த ஐந்து ஆண்டு காலத்தில், வருடாந்தம் வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதிக்கு மேலாக, மேலதிகமாக, குறை நிரப்புப் பிரேரணைகள் மூலம் பணம் அடிக்கடி ஒதுக்கப்படுவது ஒரு வழக்கமான நடைமுறையாகிவிட்டது.

அரசாங்கம் படைகளுக்கு எத்தனை கோடி பணத்தைச் செலவிட்டு நவீன ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் வாங்கியும், ஆளணியினரைத் திரட்டியும் விடுதலைப் புலிகளை அரசாங்கம் நினைத்தது போல ஒடுக்கி விட முடியவில்லை. தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கிவிட முடியவில்லை. அதற்கு மாறாக விடுதலைப் புலிகளின் புதிய புதிய போர் வியூகங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பெரும் தோல்விகளை ஸ்ரீலங்கா அரச படைகள் சந்திக்க வேண்டியதாயிற்று. கடந்த நாலரை வருடப் போரில் சுமார் ஏழாயிரம் படைவீரர்களைக் களத்தில் இழக்க வேண்டியதுமாயிற்று.

இத்தகைய நிலையில், தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கு இராணுவத்தீர்வே சரியான வழி என்ற முடிவுக்கு வந்திருந்த ஐ. தே. கட்சி அரசு, படைகளின் பலத்தை மேலும் வலிதாக்க பணத்தை வாரி இறைக்கத் தயாராக இருந்தது. வெளிநாடுகளிடம் இரந்து பெற்றேனும் படைபலத்தை பெருக்கியது.

எனவே ஐ. தே. க. அரசாங்கம் இராணுவச் செலவுக்கு நாட்டின் நிதிவளத்தை விரயமாக்கியது ஒன்றும் புதுமையல்ல; வியப்புக்குரியதும் அல்ல.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணப் போவதாகக் கூறிக் கொண்டு ஓகஸ்ட் தேர்தலில் பதவிக்கு வந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் இராணுவச் செலவுக்கு மேலும் நிதி ஒதுக்குவதுதான் அதிர்ச்சி தருவதாகும்.

தேவையற்ற, வெல்ல முடியாத யுத்தம் ஒன்றுக்காகச் செலவிடப்படும் பணத்தை நாட்டின் அபிவிருத்திக்கு ஆற்றுப்படுத்தி, மக்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்றப் போவதாகக் கூறிய பொ. ஐ. முன்னணி அரசியல்வாதிகள், ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததும், ஐ. தே. க. அரசைத் தோற்கடிக்கும் விதத்தில் விழுந்தடித்துக் கொண்டு இராணுவம் கேட்டதை கொடுக்க முன்வந்திருக்கிறார்கள்!

போரினால் பணம் சம்பாதிப்பவர்களே இராணுவத் தீர்வை ஆதரிக்கிறார்கள்: அரசியல் தீர்வை எதிர்க்கிறார்கள் என்று பொதுத் தேர்தல் மேடைகளிலும், பதவிக்கு வந்த கடந்த இரண்டரை மாதங்களாகவும் வாய் கிழியக் கத்தியவர்கள், இப்போது தாமே படைபலத்தைப் பெருக்க கோடிக் கணக்கில் பணத்தைத் தாரை வார்த்துக் கொடுக்கிறார்கள்!

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தான் முடிந்த முடிவு என்றால், இனியும் இராணுவச் செலவை அதிகரிப்பது ஏன்? நிறுத்தி வைக்கப்பட்ட ஆயுதக் கொள்வனவுகளை மேற்கொண்டு செய்வதற்கு அங்கீகாரம் அளிப்பது ஏன்? சணம் பித்தம் சணம் வாதம் என்று அடிக்கடி நிலை மாறுவது ஏன்? சொல் ஒன்று செயல் வேறாக குளறுபடி செய்வது ஏன்? இதன் அர்த்தம் என்ன?

பாதுகாப்புப் படைகளுக்கு சரணாகதி அடைவதில் அப்படி என்ன அவசரம்?

### சமஷ்டிக்கு தெற்கில் தவறான அர்த்தம்;

# தமிழ் மக்கள் பிரச்சினையில் அக்கறை மிக்கவன் நான்!

### ரணசிங்கா தொலைக்காட்சி உரை

கொழும்பு, நவ. 5

தமிழ் மக்களுக்கு நீண்ட காலமாக இருந்து வரும் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவேண்டும் என்பதில் நான் தீவிர அக்கறை கொண்டுள்ளேன்.

முன்னாள் ஐ. தே. க. அரசின் அமைச்சரும், ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான திரு. ஏ. ஜே. ரணசிங்க தொலைக்காட்சியில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள் ஆகிய சகல இனத்தவரும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்று பிரேமதாஸாவின் கொள்கையாக இருந்து வந்தது.

சிறுபான்மை இன மக்கள் அவர் மீது மதிப்பும், அன்பும், பாசமும் கொண்டிருந்தார்கள். அவரின் நற்பண்புகளை கடைப்பிடித்து வருபவன் நான்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இன்று மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சியை பாராட்டக் கூடிய ஒன்றாக கருதும் வகையில் அரசின் திட்டங்களைப் பூர்த்தி செய்ய நான் பாடுபடுவேன்.

தமிழ் மக்களுக்கு நீண்ட காலமாக இருந்து வரும் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவேண்டும் என்பதில் நான் தீவிர அக்கறை கொண்டுள்ளேன்.

யாழ்ப்பாண மக்களின் அறிவுக் கருவூலமாக இருந்த பொது நூலகத்தை சமூகத் துரோகிகள் எரித்த காலம் தொடக்கம் பல இன்னல்கள் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளதை நான் அறிவேன்.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமானால், பேச்சுவார்த்தை மூலமே தீர்த்துவைக்க முடியும். பேச்சு மூலமான அரசியல் தீர்வையே நான் விரும்புகிறேன்.

இலங்கையில் சகல இன மக்களும் சமமாக வாழ்வதற்கு அதிகாரப் பரவலாக்கல் மூலமான ஆட்சியே உகந்தது என்பது எனது அசையாத நம்பிக்கை.

சமஷ்டி முறையில் அமைந்த ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை நான் ஏற்கனவே பல தடவைகள் வெளியிட்டு இருக்கிறேன்.

நாடாளுமன்றத்திலும், சமஷ்டி அமைப்பு முறை பற்றிய எனது கருத்தை துணிந்து வெளியிட்டேன். இதன் காரணமாக என் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க சிலர் முயன்றார்கள்.

ஆனால் நான் பயந்து விடவில்லை. கொண்ட கொள்கையை தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறேன்.

சமஷ்டி என்ற வார்த்தைக்கு தென் பகுதி மக்கள் மத்தியில் சிலர் தவறான அர்த்தத்தை கொடுக்கிறார்கள். சிலர் அதை திரித்து கூறுகிறார்கள்

சமஷ்டி என்ற பெயரில் இல்லாமல் அது போன்ற நிர்வாக பரவலாக்கலே சிறந்தது என்பதையாவது அவர்கள் இப்போது ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகிறேன்.

சிங்கப்பூர், மலேசியா என்று பல நாடுகளையும் சில உதாரணமாக காண்பிக்கிறார்கள். ஆனால் கனடா, ஜேர்மனி போன்ற நாடுகளில் உள்ள அதிகாரப்பரவலாக்கல் பற்றி ஏனோ அவர்கள் குறிப்பிடுவதில்லை.

பல இன, பலமொழி பேசும் மக்கள் வாழும் ஒரு நாட்டில் சமஷ்டி போன்ற அமைப்பே சிறந்த முறையாக இருப்பதை உலக நாடுகளை கவனித்தால் தெரியவரும்.

அண்டை நாடான இந்தியாவை எடுத்துக் கொண்டால் அங்கு பல மாநிலங்கள் உண்டு. மத்திய அரசாங்கம் எல்லா மாநிலங்களையும் நிர்வகித்து வருகிறது.

ஆனாலும் வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்கள் தத்தமது மாநிலங்களில் தமக்குரிய பிரதிநிதிகளை முழுச் சுதந்திரத்துடன் வாழ்ந்து தமது கலை, கலாசாரத்தை நாளும் உயர்த்த வாய்ப்பு பெற்றுள்ளார்கள்.

இது போன்றதோர் அமைப்பு எமது நாட்டுக்கும் பொருத்தமானது என்பதாலேயே அதை நான் வலியுறுத்தி வருகிறேன்.

இதன் காரணமாகவே தற்போதைய அரசு சமாதானத்துக்கு எடுத்து வரும் முயற்சிகள் நிர்வாகப் பரவலாக்கலுக்கு வழிவகுக்கும் என்று கருதுகிறேன் — என்றார்.

(ஒ-3)

### உணவுப்பொருள்களை

## வடக்கே எடுத்துவர அனுமதி தேவையில்லை

யாழ்ப்பாணம், நவ. 5

''வடக்கிற்கு உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்ல எவரும் அரசிடம் அனுமதி பெறத் தேவையில்லை.''

மேற்கண்ட தகவலை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அதிகாரி திரு. புத்தி சிறிவர்த்தனா உதயனுக்குத் தெரிவித்தார்.

வடக்கிற்கு உணவுப்பொருள்கள் எடுத்துச் செல்ல கூட்டுப் படைத் தலைமையகத்தில் அனுமதி பெற வேண்டும் என்று முன்னர் நடைமுறை இருந்தது என்றும்—

பின்னர் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிடம் அனுமதி பெற வேண்டும் என்ற நடைமுறை இருந்தது என்றும்—

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இருந்து எதுவித அனுமதியும் இன்றி வடக்கிற்கு உணவுப் பொருளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(ஒ-3)

## தேர்தல் தொடர்பாக 684 முறைப்பாடுகள்!

கொழும்பு, நவ. 5

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நேற்று முன்தினம் வரை 684 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் இயங்கும் பொலீஸ் தேர்தல் பிரிவு அறிவித்துள்ளது.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

(ஒ-எ)

## மெய்வல்லுநர் விதிகளில் தேர்ச்சி பெற்றோர்

யாழ்ப்பாணம், நவ. 5

மெய்வல்லுநர் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்றோரைத் தெரிவு செய்வதற்காக யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடத்திய பரீட்சைகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் தேர்ச்சி பெற்றோர் விவரம் வருமாறு:–

**சுவட்டு மத்தியஸ்தர்கள்**

திரு. வி. கே. கணபதிப்பிள்ளை, திரு. கே. முருந்தன், திருமதி சிவராணி நந்தகுமார், திரு. இராஜலிங்கம், திருமதி ஜே. சீவரட்ணம், திரு. ரி. சிவகுமார், திரு. ஆர். சிவபாதசேகரம், திரு. எம். சுதர்ஷன், திருமதி எஸ். சுந்தரலிங்கம், திரு. சண். தயாளன், திரு. ரி. வாகீஸ்வரன், செல்வி கணேஸ்வரி பத்மநாதன், செல்வி ரி. கலாமதி, திரு. ஏ. முத்துலிங்கம், திரு. ரி. இராதாகிருஷ்ணமூர்த்தி, திரு. ரி. ஸ்ரீபத்குணன், திரு. வி. தவராஜா, செல்வி என். துஷ்யந்தினி. திரு. கி. விமலன், திரு. கே. சண்முகம்பிள்ளை.

**மைதான மத்தியஸ்தர்கள்**

திரு. எஸ். எம். கணேசராஜா, திரு. சி. ஆர். ஞானசோதியன், திரு. ஏ. ஜெயகாந்தன், செல்வி கமலேஸ்வரி வல்லிபுரம், திரு. கே. கணபதி, செல்வி மதுரைவாணி இராமேஸ்வரன், செல்வி பிரியதர்ஷினி இராஜேந்திரம், திரு. எஸ். இரட்ணகுமார், செல்வி ரூபி இராஜரட்ணம், எம். இரவீந்திரன், செல்வி சாந்தமலர் நாகலிங்கம், திரு. கே. சத்தியபாலன், திரு. கே. சிவகோசாரியார், திரு. ரி. சிவசோதி, செல்வி சுமதி சுப்பிரமணியம், திரு. கே. தங்கேஸ்வரன், திரு. ஐ. தேவராஜன், திரு. ரி. திருமால், செல்வி துஷ்யந்தி இராஜதுரை, செல்வி உதயகுமாரி சிவராஜா, திரு. பி. விமலநாதன், திருமதி ஏ. யோகேஸ்வரராஜா, செல்வி அனுராதா செல்லத்துரை, செல்வி கௌரீஸ்வரி நடராஜா, திரு. ஏ. ஜெகதீஸ்வரன், திருமதி மேர்லி நிர்மலா ஹரிஹரன், திருமதி என். சிவசுப்பிரமணியம், திரு. கே. இராஜாராம், திரு. என். ரவிக்குமார், திருமதி எஸ். கனகரட்ணம், செல்வி சத்தியகலா நல்லதம்பி, செல்வி சிவநங்கை கதிரித்தம்பி, செல்வி சிவானந்தகுமாரி கனகரட்ணம், திரு. வி. சிவசக்திவேல், திரு. என். ஸ்ரீகரன், செல்வி சுலோஜனா காசிப்பிள்ளை, திருமதி வி. பாஸ்கரன், செல்வி ஜனார்த்தினி சதாசிவம், செல்வி எஸ். யசோதரா, திரு. எவ். எக்ஸ். அன்ரன்.

**தொடக்குநர்கள்**

திரு. ரி. கருணாகரன், திரு. கே. முருந்தன், திரு. இ. இராஜலிங்கம், திருமதி ஜே. சீவரட்ணம், திரு. எம். சுதர்சன், திரு. சண். தயாளன், திருமதி எல். யோகராஜா, திரு. எஸ். கிறிஸ்ரியன், திரு. எஸ். எம். கணேசராஜா, திரு. சி. ஆர். ஞானசோதியான், திரு. ஏ. ஜெயகாந்தன், திரு. எஸ். கிரீந்தன், செல்வி மதுரைவாணி இராமேஸ்வரன், திரு ஏ. எம். தேவரட்ணம், திரு. கே. முதலிக்குட்டி, செல்வி பி. பத்மராணி, செல்வி பிரியதர்ஷினி இராஜேந்திரம், செல்வி சாந்தமலர் நாகலிங்கம், திரு. கே. சத்தியபாலன், திரு. ஏ. செல்வராஜா, திரு. கே. சிவகோசாரியார், திரு. ரி. சிவசோதி, செல்வி சுமதி சுப்பிரமணியம், திரு. வி. சுந்தரலிங்கம், திரு. என். ஸ்ரீகாந்தி.

**நேரங்கணிப்பாளர்**

செயன்முறைப் பரீட்சைக்குத் தகுதி பெற்றோர்:– செல்வி நளாயினி கந்தசாமி, திரு. வி. தவராஜா, செல்வி கௌரீஸ்வரி நடராஜா, திரு. ஏ. ஜெகதீஸ்வரன், செல்வி சிவநங்கை கதிரித்தம்பி, திரு. வி. சிவசக்திவேல், செல்வி சுலோஜனா காசிப்பிள்ளை, செல்வி எஸ். யசோதரா, செல்வி அன்பரசி கணபதிப்பிள்ளை.

நேரங்கணிப்பாளர்களுக்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான செயன்முறைப் பரீட்சை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

## லயன்ஸ் கழக மரம் நடுகை

வட்டுக்கோட்டை, நவ. 5

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் அண்மையில் வட்டு. இந்துக் கல்லூரியிலும் வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையிலும் நிழல் தரும் மரக்கன்றுகளை நட்டனர்.

கழகத் தலைவர் வைத்திய கலாநிதி க. ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற மரம் நடுகை வைபவத்தில் கழகத்தின் முன்னாள் ஆளுநர் வைத்திய கலாநிதி பகீரதனும் கலந்துகொண்டார்.

(சு-161)

## 70 வீதமானோர் வாக்களிப்பர்

கொழும்பு, நவ. 5

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 70 சதவீதமான வாக்காளர்கள் வாக்களிப்பர் என எதிர்பார்க்கப்படுவதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

(ஒ-எ)

## ரணசிங்க போட்டியிடுவது கட்சி மதிப்பை குறைக்கவே!

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக திரு. ஏ. ஜே. ரணசிங்க போட்டியிடுவது ஐக்கிய தேசியக் கட்சியின் மதிப்பைக் குறைப்பதற்கே என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அவர் ஜனாதிபதி வேட்பாளர் என்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட, தமது தொலைக்காட்சிப் பேச்சுகளால் பலநேயர்களைக் கவர்ந்துள்ளார் என்றும்—

அவர் இந்தப் பேச்சுக்களில் ஐக்கிய தேசியக் கட்சியைத் தாக்கிப் பேசியுள்ளார் என்றும் கூறப்படுகிறது. (ஒ-6)

## சைவ நெறித் தேர்வு நாளை ஞாயிறு நடக்கும்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் சைவ நெறித் தேர்வு நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ். மாவட்டத்தில் உள்ள 200 பாடசாலைகளில் நடைபெறும்.

இப்பரீட்சையில் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-17)

### முன்னாள் அமைச்சர் மத்தியூவினால்

## ஜனாதிபதி விஜேதுங்க அவமானப்படுத்தப்பட்டார்!

கொழும்பு, நவ. 5

காமினியின் மறைவை அடுத்து, ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை தெரிவு செய்யும் கூட்டம் ஜனாதிபதி விஜேதுங்க தலைமையில் நடைபெற்றது.

உயர் மட்டத்தால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி ரணில்விக்கிரமசிங்காவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதாக இருந்தது.

ஆனால் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ், திருமதி சிறிமா திஸாநாயக்காவின் பெயரை முன்வைத்து அவருக்கு ஆதரவளிக்கும்படி பலரையும் வற்புறுத்தினார். இதை முன்னாள் அமைச்சர் நந்தா மத்தியூ வன்மையாக ஆட்சேபித்தார். ஜனாதிபதி டி.பி. முன்னாள் அமைச்சர் நந்தா மத்தியூவினால் அவமானப்படுத்தப்பட்டார்.

ஐ. ஐ.தே. முன்னணியைச் சேர்ந்த ஒரு மாகாண சபை அங்கத்தவரை ஜனாதிபதி வேட்பாளராக அனுமதித்தால், இது ஐ. தே. கட்சியை அழிவுக்கு இட்டுச் செல்லும் என்று குறிப்பிட்ட நந்தா மத்தியூ, ஜனாதிபதி விஜேதுங்காவை கட்சித் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் அமளிதுமளி ஏற்படவே கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தமுடியாத நிலை ஏற்பட்டது. இச் சந்தர்பத்தில் நிலைமை கட்டுக்கடங்காவிட்டால் தான் கூட்டத்தை விட்டு வெளியேறப்போவதாக டி.பி. எச்சரித்தார்.

அப்போது நந்தாமத்தியூ எழுந்து ஜனாதிபதி விஜேதுங்காவைப் போகுமாறும், மீண்டும் திரும்பி வரவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார் இந்தத் தகவலை ''ராவய'' வெளியிட்டுள்ளது.

(ஒ-10)

## புனர்வாழ்வுவேலைகளுக்கு ரூ. 225 கோடி பெற முயற்சி

### அமைச்சர் அஷ்ரப் நடவடிக்கை

கொழும்பு, நவ. 5

பாதிக்கப்பட்ட மக்களினது புனர்வாழ்வுக்கும் மற்றும் சொத்துக்களின் புனரமைப்புக்கும் என 225 கோடி ரூபாவை குறை நிரப்புப் பிரேரணைமூலம் பெற்றுக் கொள்ள கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள் புனர்வாழ்வு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட, இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கான நிவாரணம், உணவு மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்காக 190 கோடி ரூபாவும்—

கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு கொடுக்க 5 கோடி ரூபாவும் செலவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-ஐ)

## மாதாந்த உதவிப்பணம்

தென்மராட்சி, நவ. 5

தென்மராட்சி பிரதேசத்தில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோர்க்கான நவம்பர் மாத கொடுப்பனவு பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினரால் அந்தந்தப் பகுதி தபால் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் அதிகரித்த தொகையுடன் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## பாடசாலைகளில்

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுப் பிரிவின் வரணி மேற்கு அமுதினி பாலர் பாடசாலை சிறார்களின் விளையாட்டுப் போட்டிகள் நாளை ஞாயிறு பிற்பகல் 2-00 மணிக்கு திரு. சி. யோகேந்திரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வரணி மகா வித்தியாலய அதிபர் திரு. சி. துரைராசா கலந்து கொள்வார்.

(ஒ-117)

## விவசாயிகளுக்கு அறிமுக அட்டை

யாழ்ப்பாணம், நவ. 5

வன்னி மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி அங்குள்ள விவசாயிகளுக்குகமக்கார அறிமுக அட்டை வழங்கும் வைபவம் அண்மையில் குமரபுரம் மகா வித்தியாலயத்தில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் விவசாயிகளுக்கு சீரான முறையில் உள்ளீடுகளை வழங்கி உற்பத்தியை பெருக்கு முகமாக வடதமிழீழம் தழுவிய ரீதியில் விநியோகிக்கப்படும் இந்த அறிமுக அட்டை வழங்கல் நிகழ்வை நிறுவன விவசாய சூழல் பாதுகாப்புப் பிரிவுப் பொதுமுகாமையாளர் ஆரம்பித்து வைத்தார்.

(ஒ)

## புலிகளின் குரல் வானொலியில்

05 — 11 — 1994

சனி இரவு

- ★ 8-01 — அறிவியற் கலசம்
- ★ 8-10 — நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-25 — நேயர் கடிதங்கள்
- ★ 8 - 30 — செய்திகள்
- ★ 8-40 — மேஜர் கணேஷ் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

06— 11 — 1994

ஞாயிறு காலை

- ★ 7 - 02 — மாவீர வணக்கம்.
- ★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
- ★ 7 - 30 — செய்திகள்
- ★ 7 - 35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

## "டெலிக்" மாணவருக்கு

யாழ்ப்பாணம், நவ. 5

வவுனியாவில் ''டெலிக்'' பயிற்சி பெறுவதற்காக கடந்த 93ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு இதுவரை அந்தப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரியில் அந்தப் பயிற்சி யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட உள்ளது. இது தொடர்பாக தகவல்களைச் சேகரிப்பதற்கான கூட்டம் ஒன்று நாளை மறுதினம் (திங்கள்) முற்பகல் 11.30 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் அனைவரையும் அங்கு சமுகமளிக்குமாறு யாழ். வலயம் 1 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஐ)

## இன்று

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ். மாநகரசபை, யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் மாநகர சபை சுகாதார தொண்டர்கள் மற்றும் வெளிக்கள ஊழியர்களுக்கான மாதாந்த பயிற்சிக் கருத்தரங்கு இன்று காலை 8. 30 மணி முதல் மாலை 3. 45 மணி வரை யாழ். நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறும்.

(உ-4)

## கணபதியும் காவிரியும்

சூரபன்மனின் கொடுமைக்கு அஞ்சிய இந்திரன் இந்திராணியோடு பூமிக்கு வந்தான். சிவபிரானைப் பூசிக்க சீர்காழியில் ஒரு நந்தவனம் அமைத்தான். அரக்கர்களின் அநியாயத்தால் மண்ணில் மழை பொழியவில்லை. நந்தவனம் வாடியது.

கவலையடைந்த இந்திரன் விநாயகப் பெருமானைத் துதித்தான். விநாயகப் பெருமான் அவன் முன் தோன்றினார். ''ஐயனே சிவபிரானைப் பூசிக்க நான் அமைத்த நந்தவனம் வாடி வளம் குன்றிவிட்டது. கொங்கு நாட்டில் தவம் செய்து கொண்டிருக்கும் அகத்திய முனிவருடைய கமண்டலத்தில் உள்ள காவிரியைத் தேவரீர் இங்கு வருமாறு செய்தால் நந்தவனம் செழிக்கும்'' என்றான் இந்திரன்.

''தேவராஜனே அவ்வண்ணமே செய்வோம். கவலையடையாதே'' என அருள் புரிந்து விட்டுக் கொங்கு நாடு சென்று அகத்திய முனிவருடைய கமண்டலத்தில் காக வடிவெடுத்து அமர்ந்தார். அகத்திய முனிவர் கையை உயர்த்தி அதனை விரட்டாக வடிவாயிருந்த கணபதி, கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டுக் காவிரியைப் பூமியில் செல்லப் பணித்து சிறகடித்துப் பறந்தார்.

ஆத்திர மடைந்த அகத்தியர் காக்கையைத் துரத்திச் சென்றதும் விநாயகப் பெருமான், காக வடிவம் நீங்கி அந்தணச் சிறுவனாக உருவெடுத்து ஓடினார். இவன் மாய வித்தையில் வல்ல அசுரன் போலும் என்று எண்ணிய அகத்தியர் அவனைக் குட்டுவதற்கு உயர்த்திய கரங்களுடன் நெடுந்தூரம் பின் தொடர்ந்து ஓடினார். அகத்தியரை மேலும் வேதனைப் படுத்தலாகாது என்று கருணை கொண்ட கணபதி, ஞானசொரூபமான திருமேனியுடன் காட்சி கொடுத்தார்.

மனம் நொந்த அகத்தியர், ''ஐயனே அறியாமையினால் நான் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று கூறியபடி குட்டுவதற்கு ஓங்கிய கரங்களினால் தனது தலையில் குட்டிக் கொண்டார்.

### கந்தபுராணக் காட்சிகள்

'முனி புங்கவ உனக்கு என்ன வரம்வேண்டும்' என விநாயகப் பெருமான் வினவ ''ஞானமே உருவான ஆனைமுகத் தெய்வமே. அடியேன் தேவரீரிடத்திலும் சிவபிரானிடத்திலும் குன்றாத அன்புடையவனாக இருக்க வேண்டும். இப்பொழுது அடியேன் செய்வது போலத் தேவரீருடைய சன்னிதானத்தில் குட்டி வழிபடுவோருக்கு அவர்களுடைய குறைகளைப் போக்கி, தாயைப் போன்று அருள் பாலிக்க வேண்டும்' என வேண்டிக் கொண்டார். ஐங்கரத்து அண்ணலும் அவ்வண்ணமே ஆகுக என அருள் புரிந்து மறைந்தார்.

மூளாய்

அருணாசலம்

இன்னே தமியேன் எனவே இனிநின்
முன்னே நுதலின் முறையால் இருகை
கொன்னே கொடுதாக்கினர் தங்குறை தீர்த்து
அன்னே எனவந்து அருள்செய் எனவே.

— காவிரி நீங்குபடலம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை சிவஞானவதி
(கரம்பொன் தெற்கு)

கரம்பொன் தெற்கைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் தற்போது கடையிற்சுவாமி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்துவந்தவருமான திருமதி சின்னத்துரை சிவஞானவதி 4-11-94இல் இயற்கை எய்திவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நா. சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சோமசுந்தரம்பிள்ளையின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற தையல்நாயகி, சோ. சிவபாதசுந்தரம் [லண்டன்], காலஞ்சென்ற பண்டிதர் சோ. தியாகராஜபிள்ளை, பெரியநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், டாக்டர் பால்வண்ணநாதரின் (இந்தியா) பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-11-94) காலை 9-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
செ. பெரியநாயகி
(சகோதரி)

217/1, கடையிற்சுவாமி வீதி,
யாழ்ப்பாணம். (33653)

## திருமதி கேதீஸ்வரி கதிரேசு

கலட்டி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கேதீஸ்வரி கதிரேசு அவர்கள் 29 – 10 – 1994 இல் அவுஸ்திரேலியாவில் (சிட்னி) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றசரவணமுத்து கதிரேசுவின் (வனஇலாகாஉத்தியோகத்தர்) அன்பு மனைவியும், பொறியியலாளர் நந்தகோபன், காலஞ் சென்ற டாக்டர் நந்ததேவி, சட்டத்தரணி நிமலினி, பொறியியலாளர் நந்தபாலன், நந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், லேகா, டாக்டர் சந்திரரத்தினம், சட்டத்தரணி அம்பிகைபாலன், ரோகிணி பொறியியலாளர் அருள்வடிவன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அருணாசலம் மகாதேவா.

66/1, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம். (8000)

## கணபதிப்பிள்ளை தங்கம்மா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை – தங்கம்மா அவர்கள் 4 – 11 – 94 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், விசாலாட்சி, இராஜபூபதி, காலஞ்சென்ற டாக்டர் குகராஜா, பராசக்தி, ஜெயராஜா [ஆசிரியர் ஸ்ரீமுருகன் வித்தியாலயம், ஏழாலை] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தியாகராஜா, தங்கராஜா [சாந்தி கபே], சகுந்தலாதேவி, சுந்தரலிங்கம் [ஓய்வுபெற்ற தபாற்கணக்கு பரிசோதகர்], பகவதி [ஆசிரியை அ. த. க. பாடசாலை, சண்டிலிப்பாய்] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பழைய பொலிஸ் நிலையம் முன்பாக உள்ள இல்லத்தில் இன்று சனிக்கிழமை [5 – 11 – 94] காலை 11 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள்

சுன்னாகம். [7695]

## சிவஸ்ரீ சிவ. நாகேஸ்வரக்குருக்கள்
(இளைப்பாறிய தபாலதிபர்)

சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த சிவ நாகேஸ்வரக்குருக்கள் 3-11-94 வியாழக்கிழமை காலமானார்.

இவர் சிவகடாட்சக் குருக்கள் — சிவகாமசுந்தரி தம்பதிகளின் அன்பு மகனும், லலிதாம்பாளின் அன்புக் கணவரும், சர்வேஸ்வரக்குருக்கள் — மனோன்மணி அம்மா தம்பதிகளின் மருமகனும், யா/யூனியன் கல்லூரி மாணவர்களான சிவசங்கர், சிவசுந்தர், சிவமனோகர் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதிகளான விசாலாட்சி, சிவப்பிரியா, பத்மாவதி, கஜாவல்லி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 04 – 11 – 94 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. சிவசங்கர்
(மகன்)

(7694)

## திருமதி
## வேலுப்பிள்ளை சிதேவிப்பிள்ளை
(இராசம்மா)

புங்குடுதீவு, 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை சிதேவிப்பிள்ளை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்தியர் சங்கரப்பிள்ளை, இராமாசிப்பிள்ளை ஆகியோரின் அன்புமகளும், காலஞ்சென்ற நவரெத்தினசிங்கம், காராளசிங்கம் (இளைப்பாறிய அதிபர், நாரந்தனை), காலஞ்சென்றவர்களான திருமதி துரையப்பா முத்தம்மா, டாக்டர் குணரெத்தினசிங்கம், மற்றும் சபாரெத்தினம் (இளைப்பாறிய – புங்குடுதீவு தபால் ஊழியர்), தாமோதரம்பிள்ளை, கார்த்திகேசு (சீனியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கதிராசிப்பிள்ளை (முரசுமோட்டை), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற வே. நாகலிங்கம்(முரசுமோட்டை), செல்லையா (பங்காளர் நாகலிங்கம் போஜனசாலை – யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், குகன்ராஜ், கோகிலராஜ், (நோர்வே), சுமித்திரா, கல்பனா (சுவிஸ்), சுஜாதா, மைதிலி ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-11-94) சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறுகேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
நா. வசந்தகுமார் (பப்பு மாஸ்டர்)
(பேறாமகன்)
(இளைப்பாறிய ஆசிரியரும், புங் – நயி-பல. நோ. கூ. சங்க கிராமிய வங்கி முகாமையாளர்)

இல. 58, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். [illegible]

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்திவரும் — 15 வயதுக்கு உட்பட்டோர் — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

**நெல்லியடி ம. ம. வியில்**

★ உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்து.

★ கரணவாய் பொன்னம்பலம் வித்தி. எதிர் உரும்பராய் இந்து.

★ மாவிட்டபுரம் இந்து எதிர் வல்வை சிவகுரு வி.

**யாழ். இந்துவில்**

★ யூனியன் கல்லூரி எதிர் சென். ஜேம்ஸ் ம.வி.

★ முத்துத்தம்பி எதிர் கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரி.

**கொக்குவில் இந்துவில்**

★ அராலி இந்து எதிர் அருணோதயா.

★ சாவகச்சேரி இந்து எதிர் புத்தூர் சோமஸ்கந்தா.

★ சென். ஜோசப் எதிர் கொண்டாவில் இராமகிருஷ்ணா.

### மனைவி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வினர்கள் மீது தொடர்ந்து சரமாரியாக 45 நிமிட நேரத்துக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றித் தகவல் வெளியிட்ட 'வெரித் தாஸ்' வானொலி —

வடபகுதியில் நடக்கும் யுத்தத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் எட்டுப் பேரைச் சுட்டுக் கொன்றால் வீரப் பதக்கம் கிடைக்கக் கூடும். ஆனால் அதையே அவர் தனது வீட்டில் செய்தால் "கம்பி" எண்ண வேண்டியது தான் என்று விமர்சித்தது.

(உ-ஐ)

### சிறிமா...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காமினி கொலையுண்டதை அடுத்து சில தினங்களுக்கு கட்சியின் தற்காலிகச் செயலாளராகப் பணியாற்றிய தஹம் விமலசேன ஆகியோர் இந்த வழக்கில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஏ.ஜே.ரணசிங்க தமது மனுவில் குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:–

காமினி கொல்லப்பட்டதை அடுத்து ஐ. தே. க வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் திருமதி சிறிமா திஸாநாயக்கா ஐ. தே. கட்சியைச் சேர்ந்தவரல்லர்; அவர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் அங்கத்தவராகவே என்றுமே இருந்துள்ளார்; அந்தக்கட்சியின் சார்பில் மத்திய மாகாண சபை உறுப்பினராகவும் தற்போது உள்ளார்.

அப்படி இருக்கையில், ஐ.தே கவின் செயலாளர் சமர்ப்பித்த மோசடியான — சட்டவிரோதமான — பொய்யான — தகவலை ஏற்று தேர்தல் ஆணையாளர் ஐ.தே.க வேட்பாளராகசிறிமா திஸாநாயக்காவை அறிவித்துள்ளார்.

ஆகவே அந்த அறிவிப்பு சட்டவிரோதமானது என்றும் —

9 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிமா திஸாநாயக்கா ஒரு வேட்பாளர் இல்லை என்றும் —

அவரும் அவரின் ஆதரவாளர்களும் பிரசார வேலைகளில் ஈடுபடுவதை நிறுத்தும்படியும் —

வழக்குச் செலவாக எனக்கு ஒரு லட்சம் ரூபாவை எதிர் மனுதாரர்கள் வழங்க வேண்டும் என்றும் —

நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

— இவ்வாறு ரணசிங்கா கேட்டுள்ளார்.

ஏ. ஜே. ரணசிங்கா கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் ஐ.தே.கவின் எம்.பியாகவும் ராஜாங்க அமைச்சராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ–4)

### 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நாகமுத்து சிவப்பிரகாசம்
(அம்பாள் மில் உரிமையாளர், சண்டிலிப்பாய்)

தோற்றம்:
05 — 02 — 1918

மறைவு:
02 — 10 — 1986

திதி:
05 — 11 — 1994

பிரிவால் துயருறும்;
— மனைவி.

[illegible]
சண்டிலிப்பாய்.

## பூச்சி மருந்து சிகிச்சை

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ்.றோட்டரக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று கைதடி வயோதிபர் இல்லம், சைவச் சிறுவர் இல்லம், இரட்சணிய இல்லம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கு பூச்சி மருந்து வழங்கப்படவுள்ளது.

(ஐ)

### புலிகளுடன்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம்மிடம் இருப்பதாகக் குறிப்பிடவில்லை.

மாநாட்டில் சிறிமா மேலும் கூறியதாவது:–

வடக்கு — கிழக்கு பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை; இனப்பிரச்சினை அல்ல. — என்று ஐ. தே. க. தலைவரும் ஜனாதிபதியுமான டி.பி. விஜேதுங்கா கூறுவதை நான் ஏற்கவில்லை.

வடக்கு — கிழக்குப் பிரச்சினை இனப்பிரச்சினையே.

இப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வுகாண, 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்த நான் தயாராக இருக்கிறேன்.

பேச்சுவார்த்தை நடத்துவதற்குமுன்பு பயங்கரவாதத்தைக் கைவிடுவதாக விடுதலைப்புலிகள் அறிவிக்க வேண்டும்.

பிரதமர் சந்திரிகா தாம் நினைத்த மாத்திரத்தில் எந்த வித திட்டமும் இன்றி— மக்கள் கருத்தைப் பெறாது— புலிகளின் அழுத்தங்களுக்குப் பணிந்து— எதிர்க்கட்சிகளுடனோ, மக்களுடனோ கருத்துப் பரிமாறாமல் — புலிகளுக்குப் பிடித்த நிபந்தனைகளுடன் — புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் வைத்து பேச்சு நடத்துவது முறையல்ல.

நான் பதவிக்கு வந்தால் தற்போதைய அவசர கதியான சமாதானப் பேச்சுவார்த்தை கைவிடப்படும்— என்றார்.

கேள்வி: விடுதலைப் புலிகள் குறித்த பொதுமக்கள் வாக்கெடுப்பாக ஜனாதிபதித் தேர்தல் மாறி இருப்பதாகக் கருதப்படுகிறது. நீங்கள் ஜனாதிபதியாக வரும் பட்சத்தில் விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து பேச்சு நடத்துவது பற்றிய உங்கள்கொள்கை என்ன?

சிறிமா; விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வைத்திருக்கும் வரை அவர்களுடன் பேச்சு நடத்த நான் விரும்பமாட்டேன். அவர்கள் தங்கள் இராணுவக் கொள்கையைக் கைவிட்டால் அவர்களுடன் பேசத்தயார். அந்தப் பேச்சுக்கள் சமாதான உடன் படிக்கையின் அடிப்படையில் இருக்கும்.

கேள்வி: விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடும் அறிகுறி இப்போது இல்லை. அப்படியானால் அவர்கள் பயங்கரவாதத்தைத் துறக்கும் வரை நீங்கள் இராணுவத் தீர்வைக் கடைப்பிடிப்பீர்களா?

சிறிமா: இல்லை. நான் யாழ்ப்பாணத்தின் ஏனைய பொதுமக்களுடன் பேச்சு நடத்த விரும்புவேன். கடந்த 10 ஆண்டுகளாக அவர்கள் எவ்வளவோ கஷ்டப்படுகின்றனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என அவர்கள் விரும்புவார்கள் என்பது நிச்சயம்.

கேள்வி: சந்திரிகா அரசு விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து பேச்சு நடத்த முயற்சித்தால் நீங்கள் உங்கள் தடுப்பு அதிகாரத்தைப் பயன்படுத்துவீர்களா?

சிறிமா: விடுதலைப் புலி[illegible] வரை தீர்வு எற்பட முடியாது [illegible] ரிப்பேன். (உ எ-ஐ-6)

### ஒளி வு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்புலிகள் தங்களிடமிருந்த போர்க்கைதிகளில் பத்துப் பேரை விடுவித்தனர்.

விடுதலைப் புலிகளுடன் ஒரு சுற்றுப் பேச்சுக்களை நாம் நடத்தினோம். எமது அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு விசேட சலுகைகள் எவற்றையும் வழங்கவில்லை.

வடக்கு கிழக்கில் நடைபெறும் கொலைகார யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர நாம் உறுதிபூண்டுள்ளோம் என்பதை விடுதலைப் புலிகளுக்கும் வடபகுதி மக்களுக்கும் வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

இதைச் செய்யக்கூடிய வல்லமை எமது அரசுக்கு உண்டு என்று அவர்கள் நம்புகின்றார்கள்

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி நிச்சயம் என்பதைத் தெரிந்து கொண்ட ஐ.தே.க., ஆத்திரமூட்டும் விதத்தில் அவலட்சணமாக வெட்கம் கெட்ட பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகரும் ஐ. தே. க. தலைவர்கள் சிலரும் மற்றும் அரசியல்வாதிகள் என்று கூறிக்கொள்பவர்கள் சிலரும் இந்தப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

யார் தமிழ் இளைஞர்களை இக்கொடூர போருக்கு இழுத்தது? ஐக்கிய தேசியக்கட்சியா அல்லது நாங்களா?

எமது புதல்வர்களின் பிரேதங்கள் மீது வெட்கங்கெட்ட முறையில் பணம் சேகரித்தது யார்? ஐ. தே. க. தலைவர்களா அல்லது நாங்களா?

திறைசேரிப் பணத்தில் இருந்து 20 கோடி ரூபா பணத்தைக் கொடுத்து யார் விடுதலைப் புலிகளுடன் இரகசியப் பேச்சுகளை நடத்தியது?

அவர்களுக்கு ஆயுதங்களை வழங்கி யுத்தத்தைத் தொடரும்படி கூறியது யார்?

நாம் எந்த அநியாயமும் செய்யவில்லை. நீதியும் சமாதானமும் ஏற்படுத்த வேண்டும் என்றே நாம் கூறுகின்றோம்.

எம்மைக் கீழ்த்தரமாகக் கண்டிக்கும் "பூமிபுத்ரர்களிடமும், ஜாதிக சிந்தனாவாதிகளிடமும்" நான் ஒன்று கேட்க விரும்புகிறேன்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப்பட வேண்டும் என்று நீங்கள் கேட்கிறீர்கள். உங்களின் பிள்ளைகளை வெளிநாடுகளில் ஆடம்பரமாக வாழ அனுப்பிவிட்டு கிராமப்புற மக்களின் குழந்தைகளை போர் முனைக்கு அனுப்பி சண்டைபிடிக்க வேண்டும் என்று கூறுகின்றீர்கள்.

யுத்தத்தைத் தொடர இன்னும் ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் தேவைப்படுகின்றனர் நீங்கள் போர் முனைக்கு செல்லத்தயாராக இருக்கிறீர்களா?

எல்லா இளைஞர்களையும் கட்டாயமாக இராணுவத்தில் சேர்க்கும் திட்டத்தை நீங்கள் ஏற்கிறீர்களா?

இனப்பிரச்சினைக்கும் யுத்தத்துக்கும் தீர்வு காணுவது குறித்து யோசனைகளை மக்களுக்கு தெரிவிப்பீர்களா என்று ஐ. தே. கவினருக்கு நான் சவால் விடுகிறேன்.

எம்மிடம் இரகசிய நிகழ்ச்சி அட்டவணைகள் எதுவும் கிடையாது. நாம் இரகசியப் பேச்சுகளை நடத்தவில்லை.

நாம் மக்களிடமிருந்து ஆணை பெற்றுள்ளோம். படையினருடன் கலந்தாலோசனை நடத்தியுள்ளோம். அதன் பின்னரே நாம் வடபகுதி சென்று பகிரங்க, ஒளிவு மறைவற்ற பேச்சுகளை ஆரம்பித்தோம்.

காமினி மற்றும் ஏனையோரின் படுகொலை பற்றிய விசாரணை துரிதமாகவும் சுதந்திரமாகவும் நடத்தப்படுகிறது.

இப் படுகொலைக்கு யார் பொறுப்பானவர்கள் என்பதனை விரைவில் அறிவிப்போம்.

அது யாராக இருந்தாலும் சரி— எமது அரசாங்கம் ஆரம்பித்துள்ள சமாதான நடைமுறைக்கும் இக்கொலைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று நான் திட்டவட்டமாகக் கூற விரும்புகின்றேன்.

இனப்பிரச்சினைக்கு முடிவில்லாத யுத்தம் தான்தீர்வு என்று மக்களாகிய நீங்கள் கருதுகிறீர்களா?

அல்லது சமாதானத் தீர்வை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கருதுகிறீர்களா?

முடிவு செய்ய வேண்டியவர்கள் வாக்காளர்களாகிய நீங்களே!

நவம்பர் 9 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் முடிவை உங்கள் வாக்குகள் மூலம் தெரிவியுங்கள் — என்றார்.

(அ-உ-எ-ஐ-6)

மாவீரர் நாள் சம்பந்தமாக

# நாளை நடைபெறும் கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், நவ. 5

மாவீரர் நாள் சம்பந்தமான கலந்துரையாடல் பின்வரும் நேர, இட அட்டவணைக்கேற்ப நடைபெறவுள்ளதால்,

இக் கலந்துரையாடலில் அனைத்து வணிகர் மன்ற, வெதுப்பக உரிமையாளர் சங்க, ஆங்கில மருந்து வணிகர் மன்ற நிர்வாக சபை உறுப்பினர், ப. நோ. கூ. சங்கம், தென்னை பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் சபை உறுப்பினர்கள், அனைத்துக் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கங்கள், அனைத்துத் தொழிற்சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள், சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் நிர்வாகிகள், ச. ச. நிலையங்களின் சமாச நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

★ தீவகக்கோட்ட வலிகாமக் கோட்டத்திற்கான கூட்டம் நாளை ஞாயிறு 10 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்திலும்—

★ வடமராட்சிக் கோட்டத்திற்கான கூட்டம் நாளை ஞாயிறு மாலை 4 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும்.—

★ தென்மராட்சிக் கோட்டத்திற்கான கூட்டம் நாளை ஞாயிறு மாலை 4 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (ஒ)

### சமாதான...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான இராணுவ அதிகாரிகள் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவர் என்றும் சில தரப்புக்கள் கூறியுள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

சமாதானப் பேச்சுக்கு இராணுவம் முட்டுக்கட்டை போடுவது போன்ற தோற்றம் ஏற்பட்டால் அதனால் சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளது செல்வாக்கு அதிகரிக்கும் என இராணுவம் தற்போது அஞ்சுவதாகவும் தெரிவதாக வெரித்தாஸ் வானொலி மேலும் தெரிவித்தது.

இராணுவம் குறித்து பிரதமர் வெளியிட்டுள்ள விமர்சனங்களுக்கு மத்தியிலும் —

புலிகளுடன் அரசு மேற்கொள்ளவிருக்கும் சமாதான முயற்சிகளுக்கு இராணுவம் ஆதரவளிக்கும் என இராணுவப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் சமாதான முயற்சிகளுக்கு தீவிரவாதிகள் எடுக்கும் பதில் நடவடிக்கைகள் குறித்து இராணுவம் அவதானமாக இருக்கும்.

சமாதான முயற்சிகளுக்கு புலிகள் இணங்கியிருப்பது நாட்டின் அதிர்ஷ்டமாகும்.

அரசின் சமாதான முயற்சிகளை படையினர் அங்கீகரித்துள்ளனராயினும் நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் என்ற வகையில் தோன்றக்கூடிய எந்த நிலைமைகளையும் எதிர்கொள்வதற்கு — இராணுவ ரீதியில் செயற்பட வேண்டியதற்கான — ஆயுதப் பயிற்சிகளை இராணுவம் தொடரும். — இவ்வாறு அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

(உ-ஐ-6)

## சோதிடர் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், நவ. 5

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் ஈராந்த பயிலரங்கும், ஆய்வரங்கும் நாளை (ஞாயிறு) பிற்பகல் 3மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறும்.

"லக்கினபாவங்கள் விளக்கம்" என்ற தலைப்பில் பயிலரங்கு இடம் பெறும்.

ஆய்வரங்கில் 'திசாபுத்திகள் என்ற தலைப்பில் நயினாதீவு, புங்குடுதீவு ப. நோ. கூ. சங்க தலைவர் திரு.ப.கனகலிங்கமும்; கணக்கீடுகள் என்ற தலைப்பில் திரு.ஐ.வைத்தியநாதனும் உரையாற்றுவர்.

(ஐ)

## சமாதான முயற்சி பற்றி ஆய்வரங்கு

கொழும்பு, நவ. 5

சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதையும், இனப்பிரச்சினைக்கு இணக்கமான அரசியல் தீர்வு காணப்படுவதனையும் உறுதிப்படுத்தும் வழிகள் பற்றிய ஆய்வரங்கு ஒன்று—

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4. 30 மணிக்கு இடம்பெறவிருக்கிறது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. சங்கத்தின் பொதுச்செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரம் ஆய்வரங்கிற்கு தலைமை வகிப்பார். சிங்கள, தமிழ் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த மதத் தலைவர்கள், கல்விமான்கள் எழுத்தாளர்கள், கலைஞர்கள் பலர் இதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்கள், (அ–4)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஐறின் எதிர்வீரசிங்கி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த திருமதி ஐறின் எதிர்வீரசிங்கி 30.10.94 இல் கொழும்பில் காலமானார். அன்னாரின் பூதவுடல் 31.10.94 திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி யோகா ரூபன்
[பேர்த்தி]

இல. 3, சென்.பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம். [33655]

## திருமதி நற்குணநாதன் நேசம்மா

கொக்குவில் தலையாளியை பிறப்பிடமாகக் கொண்டவரும், உரும்பராய் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி நற்குணநாதன் நேசம்மா 04-11-1994 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் நற்குணநாதனின் (குவைத்) அன்பு மனைவியும், துஷ்யந்தன், அனுஷா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை – சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற தியாகராஜா, புவனேஸ்வரி (கனடா), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஐயாத்துரை – காலஞ்சென்ற பவளம் தம்பதிகளின் அன்பு மருமகளும், பத்மநாதன் (கனடா), பத்மலிங்கம், கணேசலிங்கம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பராய் கிழக்கிலுள்ள, அவரது இலலத்தில் இன்று (05-11-1994) 10. 30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
வை. நாகலிங்கம்
(மாமனார்)

நிசாந்தன் வீதி,
உரும்பராய் கிழக்கு. (33656)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05—11—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org